**தலைப்பு 253 – ஓய்வூதியத் திணைக்களம் - 2024**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

தலைப்பு 253 – ஓய்வூதியத் திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டு கொள்கைகளிற்குரிய தகவல்களும் உள்ளிட்ட நிதிக்கூற்றுக்களிற்கு உரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் ஓய்வூதியத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2025 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 மே 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான ஓய்வூதியத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்களில், நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை**

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் ஓய்வூதியத் திணைக்களத்தினதும், பொதுத் திறைசேரியினதும் மற்றும் பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை திணைக்களத்தினதும், பொதுத் திறைசேரியினதும் மற்றும் இலங்கை பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

**1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

**1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்ககூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

## 2. ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 வருமான முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2001 சனவரி 15 ஆந் திகதிய இலக்கம் 1/2001 என்ற ஓய்வூதிய சுற்றறிக்கையின் 1(அ) பந்தியின் பிரகாரம் ஒவ்வொரு மாத கணக்குகளின் பொழிப்பின் மூலம் வரவு மற்றும் செலவு வைக்கப்பட்ட பங்களிப்பு பணம் தொடர்பான அறிக்கை ஒன்று அடுத்து ரும் மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் ஓய்வூதியப் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்ப வேண்டும் என காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த ஏற்பாடுகளின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது மத்திய அரசாங்கத்தின் ஏனைய நிறுவனங்களினால் செலவு | ஏதாவது சில வேறுபாடுகளின் காரணமாக ஒவ்வொரு தலைப்பிற்கும் உரிய நிறுவனங்களை ஒன்று சேர்த்தல், கலைத்தல் போன்ற காரணங்களினாலும் இந்த முரண்கள் தொடர்பில் தாக்கமளித்திருந்ததுடன் வருமானக் கணக்கில் வரவு வைத்தல் தொடர்பாக உரிய நிறுவனங்களில் இருந்து வரவு அறிவித்தல் கோரி அனுப்பப்பட்டுள்ளதுடன் தற்போது வரவு அறிவித்தல் கிடைக்கப் பெறுகின்றது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வைக்கப்பட்ட ரூபா 26,348 மில்லியன் பங்களிப்புப் பணம் தொடர்பாக செலவு அறிவித்தல் பெற்றுக் கொள்வதற்கும், ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 3.2 மில்லியன் வரவு வைத்தல்களில் ரூபா 1.5 மில்லியன் வரவு வைத்தலை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக உரிய நிறுவனங்களில் இருந்து வரவு தாள் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | | |
| (ஆ) | சமூக பாதுகாப்பு பங்களிப்புப் பணம் (விதவைகள் / தபுதாரர் மற்றும் அநாதைகள் பங்களிப்புப் பணம்) மத்திய அரசாங்கத்தினதும் மாகாண சபையினதும் வருமானக் கணக்கின் கீழ் பங்களிக்கின்ற உத்தியோகத்தர்கள் தொடர்பான தரவு முறைமை ஒன்றை பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக சமூகப் பாதுகாப்பு முறைமையின் நலன்களைப் பெற்றுக் கொள்வதற்கு குறித்துரைத்த அங்கத்தவர்களின் எண்ணிக்கை தொடர்பான தகவல்கள் காணப்படாமையினால் அதன் பிரகாரம் உரித்தாகின்ற விதவைகள் / தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியம் மற்றும் பங்களிப்புப் பணம் செலுத்துதல் போன்ற நலன் உரித்துக்களை பெற்றுக் கொள்ளும் போது பங்களிப்புப் பணம் குறித்துரைத்த ரீதியில் தொடர்ச்சியாகக் கிடைக்கின்றதா என்பதை உறதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | அரசாங்கத் துறையில் ஏனைய நிறுவனங்களுடன் தொடர்புபடுத்துதலில் மந்த நிலை காணப்படுவதன் காரணமாக (Online Re-registration செய்தல் சகல அரச நிறுவனங்களிலும் மேற்கொள்ளாமை) இந்த நிகழ்சித் திட்டத்தை அமுல்படுத்துதல் செயற்திறனற்றதாக இருந்தது. | நலானாளிகளுக்கு உரித்தாகின்ற பங்களிப்புப் பணம் குறித்துரைத்த ரீதியில் கிடைக்கின்றதா என்பதை அறிந்து கொள்ளக் கூடிய வகையில் தரவு முறைமை ஒன்று பேணிச் செல்லப்படல் வேண்டும். |
| (இ) | மத்திய மற்றும் தென் மாகாணங்களில் 2024 ஆம் ஆண்டின் இறுதியில் கிடைத்த இரண்டு காசோலைகள் 2025 சனவரி மாதத்தில் இருக்கும் போது அந்த ரூபா 183.6 மில்லியன் பெறுமதி மீளாய்வாண்டின் நிலுவை வருமானம் ஆக இனங்காணப்பட்டிருக்கவில்லை. | மத்திய மற்றும் தென் மாகாணங்களுக்கு உரிய காசோலைகள் 2024.12.30 ஆந் திகதி வங்கியில் இடப்பட்டுள்ளதுடன் 2025 இல் தேறிய 2024 ஆம் ஆண்டுக்குரிய பணம் 2025 ஆம் ஆண்டின் கணக்குகளைத் தயாரிக்கும் போது முன்னைய ஆண்டிற்குரியதாக சேகரிக்கப்பட்ட மொத்த அளவிற்கும் சீராக்கப்பட்டுள்ளது. | நிலுவை வருமானத்தை சரியாக இனங்கண்டு கணக்கு வைத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | ஓய்வூதியத் திணைக்களத்திற்குரிய கட்டிடம் வாடகை அடிப்படையில் வழங்கி இருந்த 12 நிறுவனங்களில் இருந்து 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய நிலுவை வாடகை வருமானம் ரூபா 9,405,597 ஆகும். | மேலும் அறவிட வேண்டிய பணத்தை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | நிலுவை வருமானத்தை விரைவாக சேகரித்தல் வேண்டும். |
| (உ) | மாளிகாவத்த செயலக வளாகத்தில் வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்கு முடியுமான 03 இடங்கள் நீண்டகாலமாக வாடகை அடிப்படையில் வழங்குவதற்கு முயற்சி எடுக்காமையினால் வருடாந்தம் ரூபா 3,984,000 வருமானம் அரசாங்கத்திற்கு இழக்கப்பட்டிருந்தது. | பயன்பாட்டிற்கு எடுப்பதற்கான மிகுதி நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. | அரசாங்கத்தின் ஆதனங்களை ஆக்கபூர்வமானதாக பயன்படுத்துதல் வேண்டும். |

**3.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொறுப்புக்கள் ரூபா 264,903 குறைவாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டின் கணக்குகள் தயாரிக்கப்பட்ட பின் சமர்ப்பிக்கப்பட்ட உறுதிச்சீட்டுக்களாக இருந்தமையால் கணக்குகள் சமர்ப்பிக்கும் போது கணக்குகளில் உள்ளடக்கப்பட வில்லை. | பொறுப்புக்களை சரியாக இனங்கண்டு கணக்கு வைத்தல் வேண்டும். |

**3.3 கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் கீழே குறிப்பிடப்படுகின்ற விடயங்கள் உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டுக்காக ஆக்கபூர்வமான உள்ளகக்கட்டுப்பாட்டு முறைமை ஒன்றை தயாரித்து பேணிச் செல்லப்படுகின்றது என கணக்கீட்டு உத்தியோத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் அந்த முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக முன்னர் மேற்கொண்ட மீளாய்வினை மேற்கொண்டு அதன் பிரகாரம் முறைமை ஆக்கபூர்வமானதாக கொண்டு செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டி ஏற்படுமாயின் அந்த | உள்ளகக் கட்டுப்பாட்டை வலுப்படுத்துவதற்காக கால ரீதியில் மீளாய்வை மேற்கொண்டு முறைமை கட்டுப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆண்டின் ஆரம்பத்தில் நிதிப்பிரமாணம் 135 அதிகாரம் கையளித்தல், ஓய்வூதிய சுற்றறிக்கை, உள்ளக ஆலோசனைக் கடிதம் மற்றும் கணக்காய்வு, முகாமைத்துக் கூட்டங்களில் எடுக்கப்படுகின்ற தீர்மானங்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| மீளாய்வை எழுத்த மூலம் மேற்கொண்டு அதன் பிரதி ஒன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | அறிவிக்கப்படுகின்றது. |

### 3.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி ரூபா | இணங்காமைகள் | கணக்கீட்டு உத்தியோத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை 237(அ) | 852,989 | ஒப்பந்தம் அல்லது உடன்படிக்கையின் பிரகாரம் திருப்திகரமாக வேலை செய்யப்பட்டுள்ளமை அல்லது வழங்கப்பட்டுள்ளமையும் பரிந்துரை செய்யப்பட்ட கொடுப்பனவுகள் அவற்றுக்கு இணங்கி இருந்தது எனவும் உறுதிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் 04 சந்தர்ப்பங்களின் போது பொருட்கள் கிடைத்தமையை உறுதிப்படுத்தாமல் அதாவது பொருட்கள் கிடைப்பதற்கு முன் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது | 2024.12.31 ஆந் திகதி வரை ஒதுக்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளின் மூலம் உரிய காசோலைகள் எழுதுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும் பொருட்கள் களஞ்சியத்திற்கு கிடைத்த பின்னர் அதாவது 2025 பெப்ரவரி மாதம் அந்தக் காசோலை கையளிக்கப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2010 திசெம்பர் 16 ஆந் திகதி இலக்கம் 13/2010 மற்றும் 2013 செப்தெம்பர் 20 ஆம் திகதி இலக்கம் 03/2013 என்ற ஓய்வூதிய சுற்றறிக்கைகள் | 2,668,686 | மீண்டும் விவாகமான விதவைக்கு விதவைகள், அநாதைகள் ஓய்வூதியம் மற்றும் படிகளில் 50 சதவீதம் உரித்தாக இருந்த போதிலும் மீண்டும் விவாகிய பின்னரும் முழுமையான சம்பளம் மற்றும் படிகள் செலுத்தப்பட்டமையால் பாணந்துறை, மஹர மற்றும் கலேவல பிரதேச செயலகங்களில் 06 ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் படிகள் மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | 03 ஓய்வூதியம் தொடர்பாக பரீட்சிக்கப்படுவதாக கலேவல பிரதேச செயலகத்தினாலும், 01 ஓய்வூதியம் 2025 பெப்ரவரி மாதம் முதல் தவணையாக அறவிடப்படுவதாக மஹர பிரதேச செயலகத்தினாலும், ஒரு கோவை தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்காக ஓய்வூதியத் திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவிற்கு அனுப்பப்பட்டுள்ளதாக | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்ததுடன் மேலதிகமாக செலுத்தப்பட்டவைகள் அறவிடப்படல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | பாணந்துறை பிரதேச செயலகத்தினாலும் அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | 2014 சனவரி 10 ஆந் திகதிய 1/2014 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கை மற்றும் 2010 செப்தெம்பர் 07 ஆந் திகதிய 8/2010 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கை | 11,078,250 | தங்கிவாழ்பவர்களுக்கு இராணுவ சேவை சம்பளத்துடன் வாழ்க்கைச் செலவுப் படி செலுத்த முடியாதிருந்த போதிலும் தரவு முறைமையின் பிரகாரம் 20 சந்தர்ப்பங்களின் போது மாவத்தகம, பூஜாபிட்டி, கனேவத்த, மஹர, மாஸ்பொத்த மற்றும் பாணந்துறை பிரதேச செயலகங்களில் 21 சந்தர்ப்பங்களின் போது அவ்வாறு செலுத்தப்பட்டதன் காரணமாக வாழ்க்கைச் செலவுப் படி மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | 2025 முதல் அறவிடப்படுவதுடன் உரிய பிரதேச செயலகங்களினால் அறவிடப்படுவதாக உரிய பிரதேச செயலகங்களினால் அறிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை யின் பிரகாரம் மேலதிகமாக ச் செலுத்தாமல் இருக்கும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்ததுடன் மேலதிக செலுத்துதல் கள் அறவிடப்பட ல் வேண்டும். |
| | | 975,806 | வாழ்க்கைச் செலவுப் படி ரூபா 7,800 வரை பெற முடியுமாக இருந்த போதிலும் குண்டசாலை, தமன, பூஜாபிட்டி, கனேவத்த, மஹர, மாஸ்பொத்த, கலேவல, மாவத்தகம, வெலிமட, பாணந்துறை மற்றும் புத்தளம் பிரதேச செயலகங்களில் 66 ஓய்வூதியதாரர்களுக்காக வாழ்க்கைச் செலவுப் படி குறைவாகச் செலுத்தப்பட்டிருந்தது. | 19 ஓய்வூதியதாரர் களுக்காக 2024 ஆம் ஆண்டின் போது நிலுவைப் பணம் செலுத்தப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை யின் பிரகாரம் குறித்துரைத் த படிகளைச் செலுத்துவத ற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2016 ஏப்ரல் 27 ஆந் திகதிய 03/2016 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கை | 980,000 | 2016 சனவரி 01 ஆந் திகதியின் பின்னர் ஓய்வு பெற்றுச் செல்கின்ற ஓய்வூதிதாரர்களுக்காக இடைக்காலப் படி உரித்தில்லாத போதிலும் 04 ஓய்வூதியதாரர்களுக்காக அவ்வாறு செலுத்தப்பட்டதன் காரணமாக மாஸ்பொத்த, பாணந்துறை, வலஸ்முல்ல / வீரகெட்டிய பிரதேச | 2025 ஆம் ஆண்டின் போது அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை யின் பிரகாரம் மேலதிகமாக செலுத்தப்பட ாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிரு ந்ததுடன் மேலதிக செலுத்துதல் கள் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | செயலகங்களில் இடைக்காலப் படி மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | | அறவிடப்படல் வேண்டும். |
| (உ) | 2014 நவம்பர் 03 ஆந் திகதிய 13/2014 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கை | 2,911,500 | சில ஓய்வூதியங்கள் ஒன்றிணைந்து பெறுகின்ற சந்தர்ப்பங்களில் மாதாந்தம் செலுத்தப்படுகின்ற இடைக்காலப் படி ஒன்றிணைந்த ஓய்வூதியத்திற்கு மாத்திரம் செலுத்த வேண்டியிருந்த போதிலும் மாவத்தகம, வெலிமட, குண்டசாலை, பூஜாப்பிட்டி, வலஸ்முல்ல, வீரக்கெட்டி, கலேவல பிரதேச செயலகங்களில் மற்றும் தரவு முறைமையின் மூலமும் இனங்காணப்பட்ட 14 ஓய்வூதியதாரர்களுக்காக இடைக்காலப் படி மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ளது. | 2025 ஆம் ஆண்டின் போது உரிய மேலதிக கொடுப்பனவுகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (ஊ) | 2019 யூன் 11 ஆந் திகதிய 1/2019 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கை | 963,100 | ஏதாவது நபருக்கு விதவைகள் ஓய்வூதிய சம்பளத்துடன் தங்கியிருத்தல் படி பெறப்படுகின்ற சந்தர்ப்பத்தில் அந்த விதவை ஓய்வூதியம், ஓய்வூதிய சுற்றறிக்கை 01/2019 இன் பிரகாரம் திருத்தப்பட்ட பின்னர் தங்கியிருத்தல் படிக்காக செலுத்தப்படுகின்ற இடைக்காலப் படி செலுத்துதல் நிறுத்த வேண்டியிருந்த போதிலும் கிழக்கு நுவகரகம்பலாத்த, பெல்மதுல்ல, வெலிமட, பூஜாபிட்டி, வலஸ்முல்ல, வீரகெட்டிய பிரதேச செயலகங்களில் 09 ஓய்வூதியதாரர்களுக்கு அவ்வாறு நிறுத்தப்படாமல் இடைக்காலப் படி மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | மேலதிக கொடுப்பனவுகள் தவணை ரீதியில் அறவிடப்படுகின்றது. | -மேற்படி- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | 2,675,000 | 2019 யூன் 11 ஆந் திகதிய 01/2019 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கையின் பிரகாரம் ஓய்வூதியம் திருத்தப்பட்ட பின்னர் ஓய்வூதியத்துடன் செலுத்தப்படுகின்ற இடைக்காலப் படி நிறுத்த வேண்டியிருந்த போதிலும் தமன, பாணந்துறை, கலேவல பிரதேச செயலகங்களில் 14 சந்தர்ப்பங்களின் போது அவ்வாறு நிறுத்தப்படாமல் செலுத்தப்பட்டதன் காரணமாக இடைக்காலப் படி மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | இடைக்கால படி செலுத்துதல் கைவிடப்பட்டதுடன் மேலதிகமாக செலுத்தப்பட்டவைகளை அறவிடுவதற்கு தரவு முறைமையில் உள்ளடக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (எ) | 2019 யூலை 26 ஆந் திகதி இலக்கம் 1/2019 திருத்தப்பட்ட II என்ற ஓய்வூதிய சுற்றறிக்கை | 4,538,038 | முப்படைகளின் மூலம் செலுத்தப்படுகின்ற வயது 55 வருடங்கள் வரை ஓய்வூதியம் பெறுகின்ற ஓய்வூதியதாரர்கள் மற்றும் தங்கியிருப்பவர்களுக்கு சம்பள மாற்றங்களுக்கு உரித்தல்லாது இருந்தமை காண்பிக்கப்பட்டிருக்கும் போது தரவு முறைமையின் பிரகாரம் இராணுவத்தில் சம்பளம் பெறுகின்ற 06 தங்கியிருப்பவர்களின் மற்றும் மாவத்தகம, வெலிமட, மஹர, பாணந்துறை பிரதேச செயலகங்களில் 10 ஓய்வூதியதாரர்களின் ஓய்வூதியமும் திருத்தப்பட்டு செலுத்தப்பட்டதன் காரணமாக ஓய்வூதியம் மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | சம்பளம் திருத்தங்களை மேற்கொண்டு மேலதிகமாக செலுத்தப்பட்டவைகள் தவணை ரீதியில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஏ) | 2022 சனவரி 20 ஆந் திகதிய 01/2022 ஆம் இலக்க ஓய்வூதிய சுற்றறிக்கை | | | | |
| | 2 ஆம் பந்தி | 1,200,000 | வெலிமட, பூஜாபிட்டி, கனேவத்த, மாஸ்பொத்த பிரதேச செயலகங்களில் 20 ஓய்வூதியதாரர்களுக்காக அவர்களுக்கு உரித்தான ரூபா 5,000 படி செலுத்தாமையின் காரணமாக அந்த படி குறைவாக செலுத்தப்பட்டிருந்தது. | 2025 ஆம் ஆண்டு முதல் கொடுப்பனவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் உரிய கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| | 2 (iii) ஆம் பந்தி | 915,000 | மரணமடைந்த முப்படை உத்தியோகத்தர்களுக்காக அவர்களின் வயது 55 வரை சம்பளம் உரித்தான தங்கியிருப்பவர்களுக்கு ஓய்வூதியத்துடன் ரூபா 5,000 விசேட படி உரித்தில்லாது இருந்தமை காண்பிக்கப்பட்ட போதிலும் தரவு முறைமையின் பிரகாரம் தங்கியிருப்பவர்கள் 06 பேர்களுக்காகவும் மாவத்தகம, மஹர பிரதேச செயலகங்களில் 04 தங்கியிருப்பவர்களுக்காகவும் சேவை சம்பளத்துடன் படிகள் செலுத்தப்பட்டிருந்தமையால் விசேட படி மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | பரீட்சித்து தவணை ரீதியில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | சுற்றறிக்கையின் பிரகாரம் மேலதிகமாக செலுத்தாத வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் மேலதிக செலுத்துதல்கள் அறவிடப்படல் வேண்டும். |

**3.5 அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்குகளின் தனிப்பட்ட மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 167,676,744 ஆக இருந்ததுடன் அதில் ஒரு வருடத்தை விட குறைந்த கடன் மீதி ரூபா 1,559,825 ஆகும். அந்த மீதியில் மாகாண | கடனை அறவிடும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | மிகுதி உரிய கடன் மீதியை விரைவாக அறவிடல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சபை நிறுவனங்களுக்கு இடம்மாற்றலாகிச் சென்ற இரண்டு உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிட வேண்டிய கடன் மீதி ரூபா 611,203 உம், வேலை நீக்கம் செய்யப்பட்ட மூன்று உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிட வேண்டிய கடன் மீதி ரூபா 622,320 உம், சேவையை விட்டுச் சென்ற இரண்டு உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிட வேண்டிய கடன் மீதி ரூபா 326,302 உம் ஆகும். 1-3 வருடங்களுக்கு இடையில் அறவிட வேண்டிய கடன் மீதி ரூபா 142,920 ஆக இருந்ததுடன் அது சேவையை விட்டுச் சென்றுள்ள உத்தியோகத்தரிடமிருந்து அறவிட வேண்டிய கடன் மீதி ஆகும். | | |
| (ஆ) | 3-5 வருடங்களுக்கு இடையில் அறவிட வேண்டிய கடன் மீதி ரூபா 239,812 ஆக இருந்ததுடன் அந்த கடன் மீதி வேலை நீக்கம் செய்யப்பட்ட உத்தியோகத்தரிடம் இருந்து அறவிட வேண்டிய கடன் மீதி ஆகும். 5-10 வருடங்களுக்கு இடையே வேலை நீக்கம் செய்யப்பட்ட உத்தியோகத்தரிடம் இருந்து அறவிட வேண்டிய கடன் மீதி ரூபா 153,509 ஆகும். 10-20 வருடங்களுக்கு இடையே அறவிட வேண்டிய கடன் மீதி ரூபா 305,220 ஆக இருந்ததுடன் அதில் சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தரிடம் இருந்து அறவிட வேண்டிய கடன் மீதி ரூபா 130,728 உம் வேலை நீக்கம் செய்யப்பட்ட உத்தியோகத்தரிடம் இருந்து அறவிட வேண்டிய கடன் மீதி ரூபா 174,492 உம் ஆகும். | கடனை அறவிடும் மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | -மேற்படி- |

**3.6 வைப்புக்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 02 வருடங்களை விஞ்சிய ரூபா 4,965,310 வைப்பு, நிதிப் பிரமாணம் 571(3) இன் பிரகாரம் பயன்பாட்டுக்கு எடுப்பதற்கோ அல்லது அரசாங்க வருமானத்திற்கு எடுக்காமல் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | இந்த வைப்புப் பணம் தேசிய ஓய்வூதிய தினத்திற்காக நடாத்தப்படுகின்ற விழாவிற்காக தனியார் நிறுவனங்களினால் நன்கொடையாகக் கிடைத்த பணமாக இருந்ததுடன் எதிர்வரும் ஆண்டில் தேசிய ஓய்வூதிய தினத்திற்காக பயன்படுத்துவதற்கு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) தனியார் தொலைபேசி நிறுவனம் மற்றும் திணைக்களங்களுக்கு இடையே காணப்படுகின்ற 2023 மார்ச் 01 ஆந் திகதிய புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் ஓய்வூதியத் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய பணமாக 2024 மே 08 ஆந் திகதி தொலைபேசி நிறுவனத்தில் இருந்து ரூபா 5,000,000 தொகை ஒன்று ஓய்வூதியத் திணைக்களத்திற்கு கிடைத்திருந்ததுடன் 2024 மே 29 ஆந் திகதி பொது வைப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. உரிய புரிந்துணர்வு உடன்படிக்கையின் 4.8 ஆம் பந்தியின் இணைப்பு 2 இன் குறிப்பிடப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களுக்காக இந்த பயன்படுத்த முடியுமாக இருந்தமை குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வுத் திகதியான 2024 மார்ச் 31 ஆந் திகதி வரை அந்த பணத்தை பயன்படுத்தாமல் வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | ஓய்வூதியத் திணைக்களத்தின் 2025 ஆம் ஆண்டின் மிகுதி நிகழ்ச்சித் திட்டத்திற்கு பயன்படுத்துவதற்கு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்ததுடன் உரிய நிதியினை ஆக்கபூர்வமான தாக பயன்படுத்துதல் வேண்டும். |

### 3.7 வங்கிக் கணக்கு செயற்பாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| உள்ளூராட்சி சேவைகள் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்தின் வங்கிக் கணக்கு மற்றும் உள்ளூராட்சி சேவைகள் விதவைகள், தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத்திற்குரிய வங்கிக் கணக்குகள் கடந்த பல வருட காலமாக செயலிழந்த கணக்காக காணப்படுவதுடன் அதனை மூடுவதற்கோ அல்லது அது தொடர்பான நடவடிக்கைகளேனும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | செயலிழந்த கணக்குகள் தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 பெறுகைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| வருடாந்த பெறுகைத் திட்டத்தின் பிரகாரம் 85 மேசை கணனிகளும், 10 மொனிட்டர்களும் 2024 ஏப்ரல் 01 ஆந் திகதி முதல் 2024 யூன் | தகவல் தொழில்நுட்ப பிரிவின் பரிந்துரை வழங்கப்படாது | பெறுகைத் திட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் |

| | | |
|---|---|---|
| 30 ஆந் திகதி வரையான காலத்தில் கொள்வனவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2024 நவம்பர் 22 ஆந் திகதிய பெறுகைத் திட்டம் மீண்டும் திருத்தப்பட்டு 20 கணனிகள் மற்றும் 06 மொனிட்டர்களை கொள்வனவு செய்ததன் காரணமாக 253-1-2-2509 என்ற செலவின விடயத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகையில் ரூபா 11,091,000 சேமிக்கப்பட்டிருந்தது. | இருந்தமையால் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. | வேண்டும். |

**4.2 நட்டம் மற்றும் இழப்புக்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இழப்பு மற்றும் நட்டப் பதிவேட்டில் 10 வருடங்களுக்கு மேற்பட்ட இழப்பின் பெறுமதி ரூபா 3.1 மில்லியனில் ரூபா 2.3 மில்லியன் மரணமடைந்த நபர்களுக்காக மேலதிகமாக செலுத்தப்பட்டதாக இருந்ததுடன் அவற்றை மீண்டும் அறவிட முடியாத நிலைமை ஒன்று காணப்பட்ட போதும் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தில் இருந்து நிதிக்கூற்றுக்களில் மீதி ஒன்றாக வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 104(4) இன் பிரகாரம் இறுதி அறிக்கை கோரப்பட்டிருந்த மீதியும் பரிசோதனை நடாத்த முடியாத மீதிகளுக்கும் இடையே 2025 ஆம் ஆண்டில் நிதிப்பிரமாண செயற்பாடுகளின் பிரகாரம் இழப்பு தொடர்பான நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இழப்பு மற்றும் நட்டப் பதிவேட்டில் ஓய்வூதியத் திணைக்களத்தில் இருந்து மேற்கொள்ளப்படுகின்ற அறவிடல்களின் கீழ் 2024 ஆம் ஆண்டில் அறவிடப்பட்ட பெறுமதியாக 2023 ஆம் ஆண்டின் இறுதி மீதி மற்றும் 2024 ஆம் ஆண்டின் இறுதி மீதிகளுக்கிடையே வேறுபாடு காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட்டுக் கொண்டிருக்கின்ற மீதியும் ஓய்வூதியதாரர் ஒருவர் 2024 ஆம் ஆண்டின் போது மரணமடைந்திருப்பாராயின் அவரிடம் இருந்து அறவிட வேண்டிய மொத்தப் பெறுமதி 2024 இன் பெறுவனவாக இனங்காணப்படுகின்றது. அதன் பிரகாரம் குருநாகல் மாவட்டத்தில் மரணமடைந்த 06 ஓய்வூதியதாரர்களிடமிருந்து மேலும் அறவிடுவதற்குள்ள ரூபா 662,960 மீதி 2024 ஆம் ஆண்டின் | 2025 ஆம் ஆண்டில் இருந்து இழப்பு நட்டப் பதிவேட்டை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | முறையான பிரகாரம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெறுவனவாக இனங்காணப்பட்டமையால் இழப்பு, நட்ட பதிவேட்டில் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடுவதற்கு உள்ள மீதி அப்பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தமை தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது. | | |
| (இ) | ஓய்வூதியத் திணைக்களத்தின் அறிக்கையின் பிரகாரம் நிலையான படிகள் பெறுனர்கள் 43 பேர் மரணமடைந்தமையால் மேலதிகமாக செலுத்தப்பட்டு அறவிட முடியாதிருந்த ரூபா 7,151,395 இழப்பு நட்டப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு குறிப்பிட்டுக் கொள்கின்றோம். | இழப்பு நட்டப் பதிவேட்டில் உள்ளடக்குதல் வேண்டும். |
| (ஈ) | தற்காலிக கோவை ஒன்றின் மூலம் கம்பஹா பிரதேச செயலகத்தின் மூலமும், நிரந்தர கோவை ஒன்றின் கீழ் மஹர பிரதேச செயலகத்தின் மூலமும் ஒரே ஓய்வூதியதாரருக்கு 1991 ஆம் ஆண்டு முதல் 2016 பெப்ரவரி மாதம் வரை 25 வருடங்கள் ஓய்வூதியம் செலுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கம்பகா பிரதேச செயலகத்தின் மூலம் ரூபா 1,872,587 தொகை தற்காலிக கோவையின் கீழ் ஓய்வூதியம் மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்ததுடன் ஓய்வூதியத் திணைக்களத்தால் 2016 ஏப்ரல் முதல் ஓய்வூதியம் செலுத்துதல் கைவிடப்பட்டதுடன் 2021 மார்ச் 25 ஆந் திகதி அவர் மரணமடைந்திருந்தார். அது வரையில் நிறுத்தி வைக்கப்பட்ட ஓய்வூதியத்தின் மூலம் தீர்க்கப்பட்டிருந்த நட்டம் ரூபா 1,577,343 ஆக இருந்ததுடன் மேலும் அறவிடுவதற்குள்ள தொகை ரூபா 295,044 ஆகும். இந்த நட்டத்தை அறவிடுகின்ற முறை தொடர்பான விளக்கம் ஒழுங்குபடுத்தப்படாது இருந்ததுடன் நிதிப்பிரமாணம் 110 இன் கீழ் நட்ட இழப்பு பதிவேட்டில் இந்த நட்ட இழப்பு உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு குறிப்பிட்டுக் கொள்கின்றோம். | உரிய நடவடிக்கைகள் முறையான பிரகாரம் விரைவாக எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | கம்பஹா பிரதேச செயலகத்திற்கு ஓய்வூதியதாரரின் மரணமடைந்தமை அறிக்கையிடாமை காரணமாக 29 மாத காலத்திற்காக ரூபா 582,423 மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. அதற்குரிய ஆரம்ப விசாரணை அறிக்கையின் பிரகாரம் கம்பகா பிரதேச செயலகத்தில் ஓய்வூதியப் பிரிவில் கடமை மேற்கொண்ட உத்தியோத்தர் உயிர் வாழ்வுச் சான்றிதழ் பரீட்சிக்கும் செயற்பாடுகள் பூர்த்தி செய்யாமையினால் வெளித்தரப்பினருக்கு பணம் பெற்றுக் கொள்வதற்கு இடமளிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டிருந்த போதிலும் உத்தியோகத்தருக்கு ஒழுக்காற்று கடிதம் விநியோகிப்பதற்காக மாத்திரம் பரிந்துரை வழங்கப்பட்டிருந்ததுடன் கணக்காளரின் மேற்பார்வை நடவடிக்கைகள் இடம் பெறாமையினால் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டம் தொடர்பாக அந்த உத்தியோகத்தருக்கு தாபன விதிக் கோவையின் ஒழுக்காற்று நடைமுறையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் நிதிப்பிரமாணம் 110 இன் கீழ் நட்ட இழப்புப் பதிவேட்டில் இந்த நட்ட இழப்பை உள்ளடக்காது இருந்ததுடன் மேலதிக கொடுப்பனவுகளை அறவிடுதல் தொடர்பாக எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகள் தொடர்பான தகவல்களும் சமர்ப்பிக்கப்படவில்லை. | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு குறிப்பிட்டுக் கொள்கின்றோம். | தாபன விதிக் கோவை மற்றும் நிதிப்பிரமாணத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | மத்துகம பிரதேச செயலகத்திற்குரிய 2021 ஆம் ஆண்டின் போது வெளிப்படுத்தப்பட்டிருந்த ரூபா 7,022,668 நிதி மோசடி தொடர்பாக 2024 மார்ச் வரையிலும் நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் பரிசோதனைகள் மேற்கொண்டு உரிய நடவடிக்கை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | பரீட்சித்து எதிர்காலத்தில் பதிலளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கான நடவடிக்கை விரைவாக எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) | கம்பஹா பிரதேச செயலகத்தில் மரணமடைந்த ஓய்வூதியதாரருக்காக மரணமடைந்த பின்னர் 55 மாதங்கள் ஓய்வூதியம் செலுத்தியமையால் ரூபா 2,696,303 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்ததுடன் அதற்கான நிதிப்பிரமாணம் 104 இன் பரிசோதனைகள் நடாத்தப்பட்டிருக்க வில்லை. இது தொடர்பாக மேற்கொண்ட ஆரம்ப விசாரணையின் பிரகாரம் அந்த உத்தியோகத்தருக்கு குற்றப்பத்திரிகை விநியோகிக்கப்பட்டதுடன் அதற்காக நடாத்தப்பட்ட முறையான ஒழுக்காற்று பரிசோதனையில் அவர் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் ஏனைய உத்தியோகத்தர்களுக்காக ஒழுக்காற்று நடைமுறையின் கீழ் விடயங்களை விசாரணை செய்யுமாறு மேற்கொள்ளப்பட்ட பரிந்துரை அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் நட்டத்தை அறவிடுகின்ற முறை தொடர்பான ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கவில்லை. | மேற்படி | மேற்படி |
| (ஏ) | கேகாலை மாவட்ட செயலகத்தில் முன்னாள் ஓய்வு பெற்ற உத்தியோகத்தருக்கு கேகாலை மாவட்ட செயலகத்தில் சேவையாற்றி இருக்கும் போது ஓய்வூதியம் கணனி முறைமையில் தரவுகள் போலியாக மாற்றப்பட்டு ஓய்வுதாரர் அல்லாத மூன்று பேர்களின் தனிப்பட்ட வங்கிக் கணக்கிற்கு அரசாங்கத்தின் பணம் மோசடியாக செலவு வைத்து 2010 யூன் 10 முதல் 2011 யூன் 09 ஆம் திகதி வரையான காலத்தில் ரூபா 6,381,550 தொகை மோசடி செய்யப்பட்டிருந்ததுடன் இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முறையான ஒழுக்காற்று விசாரணையின் பிரகாரம் உத்தியோகத்தர் சேவையில் இருந்து விலக்கப்பட்டிருந்தார். எனினும் நிதிப்பிரமாணம் 104(4) இன் கீழ் நட்ட இழப்பு அறிக்கை 2019 ஆகஸ்ட் 21 ஆந் திகதி விசாரணை சபையின் மூலம் வழங்கப்பட்டிருந்த போதிலும் அறிக்கையின் 10 ஆவது பந்தியில் உத்தியோகத்தரின் தனிப்பட்ட | மேற்படி | மேற்படி |

| | | | |
|---|---|---|---|
| | அசையும் மற்றும் அசைவுறாத ஆதனங்கள் / சொத்துக்களின் மூலம் அறவிட வேண்டுமென காண்பிக்கப்பட்டிருந்த போதும் இதுவரை நட்டம் அறவிடப்பட்டிருக்க வில்லை. | | |
| (ஐ) | கல்நேவ பிரதேச செயலகத்தில் ஓய்வூதிய உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட்ட நிதி மோசடிகள் ரூபா 1,666,762 ஆக இருந்ததுடன் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய மீதி ரூபா 205,402 ஆகும். 2012 ஆம் ஆண்டின் போது இனங்காணப்பட்ட இந்த மோசடி தொடர்பாக நிதிப்பிரமாணம் 104 இன் பரிசோதனைகள் மற்றும் ஒழுக்காற்று விசாரணைகள் நடாத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மேற்படி | மேற்படி |
| (ஒ) | பொல்கஹவெல / பண்டாரகம பிரதேச செயலகத்தில் 2014 ஆம் ஆண்டின் போது இனங்காணப்பட்ட ரூபா 5,049,611 நட்டமும், குருவிட்ட பிரதேச செயலகத்தில் 2014 ஆம் ஆண்டின் போது இனங்காணப்பட்ட ரூபா 5,215,589 நட்டமும் இழப்பு நட்டப் பதிவேட்டில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடலில் செயல் முன்னேற்றம் காணப்படாது இருந்ததுடன் நிதிப்பிரமான பரிசோதனை மற்றும் ஒழுக்காற்று விசாரணைகள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | நீதிமன்ற நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றமையால் வழக்கு தீர்ப்பின் பிரகாரம் எதிர்காலத்தில் அறவிடுதவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய ஒழுக்காற்று விசாரணைகள் நடாத்தி அமுல்படுத்துவதற்கு நீதிமன்ற செயற்பாடுகள் தடையூறாக இல்லாதிருந்தமை தாபன விதிக் கோவையின் II தொகுதியின் XLVIIIi அத்தியாயத்தின் 27.11 ஆம் பிரிவில் காண்பிக்கப் பட்டுள்ளமையால் உரிய ஒழுக்காற்று விசாரணைகள் நிறுவனத்தால் நடாத்துதல் வேண்டும். |

**4.3 முகாமைத்துவ நலிவுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | **முப்படையினருக்கு சம்பளம் செலுத்தும் செயற்பாடுகளில் நலிவுகள்** | | |
| | இராணுவ சேவையில் ஈடுபட்டிருக்கின்றவர்களும் ஓய்வு | மீண்டும் பரிசோதனைகளை மேற்கொண்டு பதிலளிப்பதற்கு | பாதுகாப்பு அமைச்சுடன் |

| | | |
|---|---|---|
| பெறுகின்ற சாதாரண முறைமையின் பிரகாரம் அதாவது ஓய்வூதிய உறுப்புரையின் 2.17 ஆம் பிரிவின் ஓய்வு பெற்று ஓய்வூதியம் செலுத்துதல் ஆரம்பிக்கப்படுவதுடன் உரிய சேவையில் ஈடுபட்டிருக்கின்றவருக்கு இராணுவ மருத்துவ சபையினால் சேவைக்கு பொருத்தமற்றவர் என தீர்மானிக்கப்பட்டு இராணுவத் தளபதியால் பரிந்துரை செய்யப்படுமாயின் இயலாமை ஓய்வூதிய சம்பளம் செலுத்தப்படுகின்றது. உரிய ஓய்வூதியதாரரின் இயலாமை ஏற்பட்ட திகதி மற்றும் மருத்துவ சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட திகதிகளுக்கு இடையே நீண்ட இடைவெளி எடுக்கப்பட்டிருந்ததுடன் இயலாமை ஏற்பட்ட காலப் பகுதியின் போது மருத்துவ சபைக்கு சமர்ப்பித்து இயலாமை தொடர்பாக இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்காமையினால் ஓய்வூதியத் திணைக்களத்திற்கு அடிப்படை சம்பளம், வாழ்க்கைச் செலவுப் படி, இடைக்காலப் படி மற்றும் பணிக்கொடை பணிகள் போன்ற யாவும் மேலதிகமாகச் செலுத்தப்படுகின்றது. அதன் பிரகாரம் கலேவல பிரதேச செயலகத்தில் ரூபா 11,433,021 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | குறிப்பிடுகின்றோம். | கலந்துரையாடி உரிய நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) **இராணுவ இயலாமை சம்பளம் மேலதிகமாக செலுத்துதல்** | | |
| கலேவல பிரதேச செயலகத்தில் ஓய்வூதிய இலக்கம் 59–1176493 என்ற ஓய்வூதியதாரருக்கு 6-59 ஒன்றிணைக்காமையின் காரணமாக இயலாமை சம்பளம் ரூபா 194,496 மேலதிகமாக செலுத்தப்பட்டதுடன் அவர் 2022 மார்ச் 07 முதல் காணாமல் போனதன் காரணமாக அந்த மேலதிகமாகச் செலுத்தப்பட்ட பணம் 2024 திசெம்பர் வரையும் அறவிடுவதற்கோ அல்லது உரிய குறித்துரைத்த நடவடிக்கைகளை எடுப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மேலதிகமாக செலுத்தப்பட்ட பணத்தை அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | மேலதிகமாக செலுத்தப்படாத பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்ததுடன் மேலதிக செலுத்துதல்கள் அறவிடப்படல் வேண்டும். |
| 2013 ஒக்தோபர் 10 ஆந் திகதிய இயலாமை ஓய்வூதியம் கையளித்தல் பத்திரத்தின் பிரகாரம் மஹர பிரதேச | மேற்படி | மேற்படி |

| | |
|---|---|
| செயலகத்தில் ஓய்வூதிய இலக்கம் 3-1153570 என்ற ஆயுதப் படை சேவை ஓய்வூதியத்திற்கு உரித்தான இயலாமை ஓய்வூதியம் 2015 ஆகஸ்ட் 20 ஆந் திகதி நிறுத்த வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்காமல் கணக்காய்வுத் திகதி வரை ரூபா 471,332 மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. | |
| மாவத்தகம பிரதேச செயலகத்தில் இராணுவ ஓய்வூதிய இலக்கம் 3-1168861 உரித்தான ஓய்வூதியதாரர் 2015 திசெம்பர் 12 ஆந் திகதி முதல் இராணுவ சேவையில் இருந்து ஓய்வு பெற்று 2016 மே 09 ஆம் திகதி முதல் இராணுவத்தின் மூலம் சம்பளம் மற்றும் படிகள் பெற்றதுடன் 2018 யூலை 19 ஆம் திகதி முதல் இயலாமை ஓய்வூதிய வழங்கியதன் காரணமாக ஆரம்ப ஓய்வூதிய சம்பளம் திருத்தப்பட்டிருந்த போதிலும் அந்த திருத்தங்கள் அமுல்படுத்தப்படாமையின் காரணமாக பணிக்கொடை படி ரூபா 128,124 உம், 2016 மே 09 ஆம் திகதி முதல் 2024 மே 10 வரை அடிப்படை ஓய்வூதியம் ரூபா 517,834.50 உம் மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | 2025 ஆம் ஆண்டு முதல் மேற்படி தவணையாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| மாவத்தகம பிரதேச செயலகத்தில் இராணுவ ஓய்வூதிய இலக்கம் 3-1327628 என்ற ஓய்வூதியதாரர் 2018.01.19 ஆந் திகதி ஓய்வு பெற்றுச் சென்றதுடன் ஓய்வூதிய இயலாமையுடன் 2018.01.19 ஆந் திகதியில் இருந்து திருத்தப்பட்டிருந்த போதிலும் திருத்தப்பட்ட ஓய்வூதியம் செலுத்தாமல் ஆரம்ப ஓய்வூதியம் செலுத்தியதன் காரணமாக பணிக்கொடை தொகை ரூபா 130,564 உம், ஓய்வூதியம் ரூபா 99,638 உம், வாழ்க்கைச் செலவுப் படி 28,200 உம் மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | மேலதிகமாக மேற்படி செலுத்தப்பட்டவைகள் எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

(இ) **நிலையான படிகள் செலுத்துதல்**

யுத்த காலத்தில் மரணமடைந்த முப்படைகள் மற்றும் விசேட படையணிகளை உள்ளடக்கிய பொலிஸ் அங்கத்தவர்களில் தங்கியிருப்பவர்களுக்கு பாதுகாப்பு

| | | |
|---|---|---|
| அமைச்சின் 2021 மே 18 ஆந் திகதிய MOD/1/2021 ஆம் இலக்க சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஓய்வூதியத் திணைக்களம் நிலையான மாதாந்தப் படி ஒன்று செலுத்தி இருந்ததுடன் அது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| பாணந்துறை பிரதேச செயலகத்தின் தரவு முறைமையை பரீட்சிக்கும் போது நிலையான படி உரித்தான படைவீரர்களில் தங்கியிருப்பவர்களில் 05 பேர்களுக்கு நிலையான படி பெறுகின்றமை அவதானிக்கப்பட்ட போதிலும் நிலையான படி செலுத்துவதற்குரிய எந்த ஒரு தகவலும் ஓய்வூதியக் கோவையில் உள்ளடக்கப்படாமையால் செலுத்தப்பட்ட நிலையான படியின் பெறுமதியின் சரியான தன்மை மற்றும் நிலையான படியைப் பெறுவதற்குள்ள உரித்து போன்றவற்றை உறுதிப்படுத்த முடியாமல் இருந்தது. | பிரதேச செயலகம் மற்றும் முப்படை சுற்றறிக்கை ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாது இருந்தமை வெளிப்படுத்தப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| ஓய்வூதிய திணைக்களத்தால் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் நிலையான படி பெறுபவர்கள் மரணமடைவார் களாயின் அது தொடர்பான அறிக்கை அறிக்கையிடாமையின் காரணமாக 2025 மே வரையில் ரூபா 3,884,706 அறவிடுவதற்கு முடியாது இருந்தது. | நிலையான படி பெறுபவர்கள் மரணமடைந்தமை அறிக்கையிடாமையின் அடிப்படையில் மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ள படிகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. | மேலதிகமாக செலுத்தப்படாத பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டி இருந்ததுடன் மேலதிக செலுத்துதல்கள் அறவிடப்படல் வேண்டும். |

**(ஈ) ஆயுதப் படைகளுக்கு ஓய்வூதியம் மற்றும் பின்நலன் முகாமைத்துவம்**

| | | |
|---|---|---|
| கலேவல பிரதேச செயலகத்தில் ஓய்வூதிய இலக்கம் 3-1146072 என்ற ஓய்வூதிதாரர் 2012 ஒக்தோபர் 09 ஆந் திகதி சேவையில் இருந்து ஓய்வு பெற்றுச் சென்றதுடன் 2012 ஒக்தோபர் 09 முதல் 2022 ஒக்தோபர் 09 வரை இராணுவ ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடைக் கோவையின் 18(1)(அ) இன் கீழ் சேவைக் காலத்தின் பிரகாரம் மாற்றப்பட்ட பின்னர் மாதாந்த சம்பளம் ரூபா 21,514 செலத்த வேண்டியிருந்த போதிலும் மாற்றுவதற்கு முன் மாதாந்த சம்பளமான ரூபா 24,632 ஆரம்பத்தில் இருந்து செலத்தியதன் காரணமாக 2024 திசெம்பர் வரை | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மேற்படி |

| | | |
|---|---|---|
| ரூபா 374,162 ஓய்வூதியம் மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | | |
| மஹர, கனேவத்த மற்றும் பாணந்துறை பிரதேச செயலகங்களுக்கு உரிய 05 இராணுவ ஓய்வூதியதாரர்களின் ஓய்வூதியம் திருத்ததல் உரிய பிரகாரம் அமுல்படுத்தப்படாமையின் காரணமாக ஒரு ஓய்வூதியதாரரின் ஓய்வூதியம் ரூபா 178,769 குறைத்தும், 04 ஓய்வூதியதாரர்களின் ஓய்வூதியம் ரூபா 1,275,557 அதிகரித்தும் செலுத்தப்பட்டிருந்தது. | 2025 ஆம் ஆண்டின் போது சரி செய்யப்படும். | ஓய்வூதியம் சரியாக கணிப்பிட்டு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 5. செயற்பாட்டு மீளாய்வு

### 5.1 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைதல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2030 ஆண்டின் போது நிறைவேற்றுவதற்கு இலக்கிடப்பட்ட நிலைபேறான அபிவிருத்திக்கான நோக்கங்களின் கீழ் ஓய்வூதியத் திணைக்களத்தால் ஒரு நோக்கம் மாத்திரம் இனங்காணப்பட்டிருந்தது. அந்த நோக்கம் தொடர்பாகவும் விளக்கமான இலக்குகள் ஸ்தாபிக்கப்படாமல் இருந்ததுடன் அடிப்படையாகக் கொள்ளப்பட்ட தரவுகள் மற்றும் செயல் முன்னேற்றத்தை அளவிடும் குறிகாட்டிகள் முறையாக ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அமுல்படுத்துவதற்காக நிறுவனத்தின் பணிப் பொறுப்பு மற்றும் அது தொடர்பான ஆர்வம் காண்பிக்கின்ற தரப்பினரும் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | இந்த நோக்கங்களை அடைந்து கொள்ளல் ஓய்வூதியத் திணைக்களத்தின் மூலம் மாத்திரம் மேற்கொள்ள முடியாதிருந்த போதிலும் ஓய்வு பெற்றுச் சென்ற பின்னர் வழங்கக் கூடிய நலன்கள் தொடர்பாக, சமூக ரீதியில் சகல தரப்பினரும் தெளிவுபடும் வகையில் விரிவுபடுத்தி ஓய்வூதிய வெளிப்படுத்தல் திட்டம் ஒன்றை தயாரிப்பதற்கு உரிய அடிப்படை எண்ணக்கரு மற்றும் முன்மொழிவுகள் 2020 ஆம் ஆண்டின் போது ''சகலருக்கும் ஓய்வூதியம்'' முன்மொழிவின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேலும் அந்த கொள்கை ரீதியான முன்மொழிவு அரசாங்க சேவை அமைச்சின் செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் அமைச்சில் இருந்து இது தொடர்பாக எடுக்க வேண்டிய மிகுதி நடவடிக்கைகள் தொடர்பான ஆலோசனைகள் பெற வேண்டி உள்ளது. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |